மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு திருத்தப்பட்டபடி ஏற்கப்பட்டது.

(ஈ) பிச்சையெடுத்தல் தடுப்பு தமிழ்நாடு (திருத்த) சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994 ஆம் ஆண்டு பிச்சையெடுத்தல் தடுப்பு தமிழ்நாடு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 2/1994). மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

*** மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு பிச்சையெடுத்தல் தடுப்பு தமிழ்நாடு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 2/1994), @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவு 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் 3 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

@ 3-1-1994 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது,

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு பிச்சையெடுத்தல் தடுப்பு தமிழ்நாடு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண்.2/1994) நிறைவேற்றப் பெறவேண்டும்."

எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

(உ) திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்.46/1993), மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

* **மாண்புமிகு திரு. மு. தென்னவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1993) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக்கோருகிறேன்.